# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII | YEAR OF OUR LORD JESUS CHRIST, JUNE 2022 | No. 6


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**நீதிமொழிகள் 4:1-10**

1. பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள்.
2. நான் உங்களுக்கு நற்போதகத்தைத் தருகிறேன்; என் உபதேசத்தை விடாதிருங்கள்.
3. நான் என் தகப்பனுக்குப் பிரியமான குமாரனும், என் தாய்க்கு மிகவும் அருமையான ஒரே பிள்ளையுமானவன்.
4. அவர் எனக்குப் போதித்துச் சொன்னது: உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக் கொள்ளக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.
5. ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.
6. அதை விடாதே, அது உன்னைத் தற்காக்கும்; அதின்மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக் கொள்ளும்.
7. ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி, என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள்.
8. நீ அதை மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும்; நீ அதைத் தழுவிக்கொண்டால், அது உன்னைக் கனம் பண்ணும்.
9. அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும், அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும்.
10. என் மகனே, கேள், என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்; அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்.

# உங்கள் புலம்பல் ஆனந்தக் களிப்பாக மாறும்! – (சங்கீதம் 30:11)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி)

நம்முடைய நெருக்கடியான காலங்களில் வழக்கமாக வைத்தியர்களையோ அல்லது நண்பர்களையோ சந்தித்து ஆலோசனை பெறும் போது அவர்கள் நம்மிடத்தில் "கவலைப்படாதீர்கள், எல்லாம் சரியாய்ப் போய்விடும். காலப் போக்கில் கஷ்டங்கள் எல்லாம் கடந்து போகும்" என்று கூறுவார்கள். இன்றும் பல தேவ மக்கள் மிகுந்த துக்கத்தோடும், வேதனையோடும், சஞ்சலத்தோடும் வாழ்ந்து வருகிறார்கள். அநேக நேரங்களில் நமது வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் அதிகமாகும்போது நாம் நம்பிக்கையிழந்து விடுகிறோம். குறிப்பாக, கடந்த கொரோனா வியாதியினிமித்தம் உலக மக்கள் அனைவருமே மிக கஷ்டத்திற்குள்ளாகி விட்டனர்.

நமது வாழ்க்கையில் ஆண்டவர் நம்மை நடத்தும் பாதையைக் குறித்தத் தெளிவான அறிவு நமக்கில்லாமல் போகும்போது நாம் வேதனைக்குள்ளாகிறோம். எந்தத் துன்பமும், எந்தக் கஷ்டமும், எந்தவொரு சிட்சையும், எந்தவொரு வலியும் நாம் அனுபவிக்கும்போது கஷ்டமாகத் தோன்றும். சில வேளைகளில் நமது வாழ்க்கையில் ஏற்படும் துக்ககரமான சம்பவங்களைக் குறித்து யோசிக்கும்போது, "இது ஆண்டவருக்குத் தெரியாமல் நடந்து விட்டதோ? அல்லது ஆண்டவர் கவனிக்காமல் போய்விட்டாரோ?" என்று நினைக்கிறோம். அவரறியாமல் ஒன்றும் நமது வாழ்க்கையில் நடப்பதில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவற்றினூடாகக் கடந்து போன பின்பு அதன் முடிவை ஆண்டவர் சந்தோஷமாக மாற்றுகின்றார். கஷ்டங்களும், கவலைகளும் சந்தோஷமாக மாறுகின்றன. ஆகவே, உங்கள் தற்போதைய துக்கம் சந்தோஷமாய் மாறும்! பயப்படாதீர்கள்!! "**... உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்**" (யோவான் 16:20).

வாழ்க்கையில் துன்பங்களும், துக்கங்களும், கஷ்டங்களும் வந்து நம்மை நெருக்குகிற வேளைகளில் அவற்றிற்கான காரணங்களைக் குறித்து நாம் யோசிக்கிறோம். ஆனால் மத்தேயு 5:4–ஐ நாம் வாசிக்கும்போது "**துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்**" என்று ஆண்டவர் கூறுகிறார். இவ்வுலகில் வாழ்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் பெற்றிருப்பவர்களை பாக்கியவான்கள் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் ஆண்டவரோ, துயரப்படுகிறவர்களை பாக்கியவான்கள் என்று வித்தியாசமாகக் கூறுகிறார். துயரப்படுவோர் பாக்கியவான்கள் என்று கூறுகிற ஆண்டவர், அத்துயரங்கள் சந்தோஷமாக மாறும் என்றும் நன்கு அறிவார். மனிதர்களால் இதை ஏற்றுக் கொள்வது மிகவும் கடினம்.

துயரம் என்ற வார்த்தைக்கு மௌனமான, தொய்வான ஒரு மனநிலை என்று அர்த்தம் கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏற்படும் துயரங்கள் வித்தியாசப்படலாம். சிலருக்கு வேலையில்லாத துயரம், சிலருக்கு உடலில் ஏற்படும் வியாதிகளினால் துயரம், சிலருக்கு பணக்கஷ்டத்தினால் துயரம், சிலருக்கு வேலை ஸ்தலங்களில் அல்லது குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளினால் உண்டாகும் துயரம், சிலருக்கு வருங்காலத்தைக் குறித்தக் கவலை என ஒவ்வொருவருக்கும் துயரங்கள் வெவ்வேறு விதங்களில் வரலாம். ஆனால் எப்பேர்ப்பட்ட துன்பமாக, துயரமாக இருந்தாலும் அவற்றை அனுபவிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றும், அவர்கள் ஆறுதலடைவார்கள் என்றும் ஆண்டவர் கூறுகிறார். மேலும், அவை சந்தோஷமாக மாறும் என்றும் கூறுகிறார். இன்றும் உங்களைப் பார்த்து ஆண்டவர் அப்படியே கூறுகிறார். எனவே

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



"அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி,
உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்.
– சங்கீதம் 147:14"



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Bro. M. Paulraj, M.A., B.Ed.
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.



**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம். இதுவரை நம்மை ஆச்சரியமாக நடத்தி வந்த நம் தேவாதிதேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

### அழைப்பின் எதிரொலி பத்திரிகைகள்

❖ தேவனுடைய சொல்லிமுடியாத இரக்கத்தால் நம் பத்திரிகை **அழைப்பின் எதிரொலியை** 16 மொழிகளிலும் மாதந்தோறும் அச்சிட்டு அனுப்ப தேவன் உதவி செய்து வருகிறார். ஜெபித்து வருகிற மற்றும் பணஉதவி செய்கிற உங்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிப்பார். பலமொழிகளைப் பேசும் ஏராளமான மக்கள் இப்பத்திரிகைகளின் மூலம் தேவ அன்பால் தொடப்பட்டு வருகின்றனர்.

### நெகேமியா முழுநேர வேதாகமக்கல்லூரி (இந்தி)

❖ நம்முடைய முழுநேர இந்தி நெகேமியா வேதாகமக் கல்லூரிக்கு இன்னும் சில மாணவர்கள் தேவை. வகுப்புகளை 2022 ஜூன் மாதம் 6-ம் தேதி ஆரம்பிக்க வேண்டும். தகுதி உள்ள மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம், கல்வி யாவற்றையும் இலவசமாக வழங்குகிறோம். கூடுமானால் இச்செய்தியை நேரடியாகவோ, கடிதங்கள் மூலமாகவோ, வாட்ஸ்அப் மூலமாகவோ உங்கள் நண்பர்களுக்கும், ஜெபப்பங்காளர்களுக்கும் பகிர்ந்து, இந்தி தெரிந்த மாணவர்களை (ஆண்கள் மட்டும்) அறிமுகம் செய்து அனுப்பி, உதவுங்கள். ஒரு வருட சான்றிதழ்க்கல்வியும், இரண்டு வருட டிப்ளோமாக்கல்வியும் அளிக்கிறோம். நம்முடைய நெகேமியா வேதாகமக்கல்லூரிக்கு அகில உலகரீதியில் வேதாகமக்கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் ஸ்தாபனமான ATA (Asia Theological Association)-ன் அங்கத்துவத் தகுதியினைப் பெற்றுள்ளோம்.

### வட இந்திய மக்களுக்கு சுவிசேஷம் (Reaching North India)

❖ வட இந்தியாவில் வாழும் எல்லா பலமொழி பேசும் மக்களும் எப்படியாவது சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பது எங்கள் நீண்ட கால இதய வாஞ்சையாகவும், ஆழமான தரிசனமுமாகவும் இருக்கிறது. எனவே அதிக மாணவர்களை நம் இந்தி முழுநேர வேதாகமக் கல்லூரியில் சேர்க்க விரும்பி, சென்ற மே மாத ஆரம்பத்தில் ஒரிசா மாநிலத்திலுள்ள ராயகடா, பர்வகமுண்டி, கந்தமால் ஆகிய மாவட்டங்களுக்கு நான் நேரில் சென்று ஊழியம் செய்தேன். பல கஷ்டங்களுக்கு மத்தியில் ஊழியம் செய்தோம். ஒரே ஒரு வாழ்க்கை! அதை தேவனுக்கேக் கொடுப்போம்.

### நெகேமியா வேதாகமக்கல்லூரி நூலகம்

❖ தேவகிருபையால் நம் நெகேமியா வேதாகமக் கல்லூரிக்குரிய நூலகப்புத்தகங்களை (Nehemiah Bible College Library) கணினியில் பதிவேற்றம் செய்து ஒழுங்குபடுத்தும் பணிகளை சிறுக சிறுகச் செய்து வருகிறோம். நம்மிடம் சுமார் 7,000 புத்தகங்கள் உள்ளன. இப்புத்தகங்களை முறைப்படி ஒழுங்குபடுத்துவதற்கு நம் சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஏராளமான வேலைகளும், செலவுகளும் உள்ளன. இன்னும் தேவையான பொருளாதாரத்தை நம் தேவன் தருவார். **என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்** (*பிலிப்பியர் 4:19*).

### நெகேமியா மாலைநேர வேதாகமக்கல்லூரி (தமிழ்)

❖ நம் மாலைநேர தமிழ் வேதாகமக் கல்லூரியும் சிறப்புடன் நடைபெறுகிறது. அதுவும் வருகிற ஜூன் மாதம் 6-ம் தேதி திறக்கப்படும். நல்ல தரமான மாணவர்களும்,

மாணவியர்களும் (ஆண்களும், பெண்களும்) கிடைக்க ஜெபியுங்கள். ஒரு வருட சான்றிதழ்க்கல்வியும், இரண்டு வருட டிப்ளோமாக் கல்வியும் அளிக்கிறோம்.

### 2021–2022–ம் வருடக் கல்வியாண்டின் நெகேமியா வேதாகமக்கல்லூரிகளின் பட்டமளிப்பு ஆராதனை

❖ நமது வேதாகமக் கல்லூரிகளின் 2021-2022-ம் வருடக் கல்வியாண்டின் பட்டமளிப்பு விழா கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற 03.06.2022 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு, சென்னை, புரசைவாக்கம் பாலர் கல்வி நிலையத்தில் வைத்து நடைபெறும். உங்கள் ஜெபம் தேவை. சென்னையில் நீங்கள் இருந்தால் அவசியம் கலந்து கொள்ளுங்கள்.

### செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி

❖ நம் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** சிறப்புடன் நடைபெறுகிறது. அங்குள்ள ஏழைப்பிள்ளைகளை அவர்கள் தங்கும் இடங்களிலிருந்து அழைத்து வரவும், அவர்களைத் திரும்பக் கொண்டுவிடவும் நாம் உபயோகித்த வாகனம் (மினி பஸ்) பழுதடைந்து, பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளது. புதிய ஒரு வாகனம் வாங்க வேண்டும். பொருளாதாரத்திற்காக ஜெபம் பண்ணுங்கள். இப்பள்ளியும் கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற ஜூன் மாதம் 13-ம் தேதி, திங்கட்கிழமை அன்று திறக்கப்படும். இப்பள்ளிக்கு தேவ தயவால் தமிழ்நாடு அரசு, 'உயர்நிலைப்பள்ளி' என்ற அங்கீகாரத்தையும் (Recognition), இந்திய அரசாங்கம் "கிறிஸ்தவ சிறுபான்மை ஸ்தாபனம்" (Christian Minority Institution) என்ற தகுதியையும் வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

❖ மேலும் நமது மிக முக்கிய ஊழியங்களான **வேதாகமத் தபால் கல்விகள், சுவிசேஷ அச்சகம், தேவ சபைகள், வெளிக்கூட்டங்கள், சமுதாயச் சேவைகள்** யாவற்றையும் உங்கள் ஜெபங்களில் நினைவு கூருங்கள்.

❖ நானும், என் குடும்பத்தாரும் சுகமாயிருக்கிறோம். பெலவீனமாயிருக்கிற நம் உடன் ஊழியர்கள் சகோ. மனுவேல் எம். பால்ராஜ், போதகர் எம். முத்து மற்றும் சகோதரர் இளங்கோவன் ஆகியோரை உங்கள் ஜெபங்களில் நினைவு கூருங்கள்.

❖ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களை நேசித்து அனுப்புகிற உங்கள் காணிக்கைகளுக்காக தேவன் உங்களை அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பார். நாங்கள் உங்களுக்காகக் கருத்தாய் ஜெபிக்கிறோம். இந்த ஊழியங்கள் யாவும், உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இராஜ்யப் பிரஸ்தாபத்தினை மட்டுமே கருத்திற்கொண்டு செயல்படுகின்றன என்ற உண்மையை தேவ ஆவியானவர் உங்களுடன் பேசினால், உங்களால் இயன்ற காணிக்கைகளை அனுப்பி தேவனுடைய ஊழியங்களை ஆதரியுங்கள். தேவன் உங்களை நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

வெளிப்படையாக எழுதமுடியாத பாடுகளும், பிரச்சினைகளும், கஷ்டங்களும், நெருக்கங்களும் அத்துடன் தேவனால் அருளப்பட்ட விடுதலைகளின் சாட்சிகளும் எங்களுக்கு உண்டு. எனவே, எங்களுக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858,
மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். "**ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்**" (1 பேதுரு 5:6).

வாழ்க்கையில் பெலவீனமான நேரங்களிலும், செழிப்பை இழந்த நேரங்களிலும், நம்பிக்கையை இழந்த நேரங்களிலும் ஆண்டவரை உண்மையோடும், முழுமனதோடும் நோக்கிப் பார்க்கும்போது அவர் நம்மோடு பேசுவதை நாம் உணர முடியும். இவ்வுலகத்தில் துன்பமில்லாத வாழ்க்கை அனுபவிக்கிறவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதில்லை. நாம் சோர்ந்து போகும் நேரங்களிலும், துயரப்படும் நேரங்களிலும் மட்டுமே ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கவும், அவருடைய தொடுதலை உணரவும் முடியும். நல்ல சாதகமான சூழ்நிலைகளில் தேவசத்தத்தை நாம் கேட்பது கூடாத காரியம். ஆகவேதான், துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்றார் நம் ஆண்டவர்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு ஏற்பட்ட துன்பத்தின்போது ஆண்டவரிடத்தில் அத்துன்பம் தன்னை விட்டு நீங்கும்படி வேண்டிக்கொண்டார். அத்தருணத்தில் தேவன் "**... என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்** ..." (2 கொரிந்தியர் 12:9) என்று பதில் கூறினார். அப்போஸ்தலனாகிய பவுல் நினைத்திருந்தால் ஒரு உயர்தரமான, வசதியான வாழ்க்கை வாழ்ந்திருக்க முடியும். ஆனால் தேவ சத்தத்தைக் கேட்கமுடியாதபடி, தேவனுடைய தொடுதலை அறியாமல் வாழ விரும்பாமல், துயரங்களின் மத்தியில் வாழ்ந்தாலும் தேவ சத்தத்தைக் கேட்கிற மனிதனாக வாழ்ந்ததால் அதையே தனக்கு ஆசீர்வாதமும், மகிழ்ச்சியுமாக அவர் எண்ணினார். ஆகவேதான் பிலிப்பியருக்கு "**அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்**" (பிலிப்பியர் 3:11) என்றும் எழுதினார். மோசேயைக் குறித்து, "**விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்**" (எபிரெயர் 11:24–26) என்று பரிசுத்த வேதம் கூறுகிறது.

துன்பங்கள் நெருக்கும்போது நாம் அவற்றினின்று விடுபட வேண்டி, சுயபெலத்தில் சார்ந்திராமல், ஆண்டவரை மட்டும் சார்ந்திருக்கும்போது அவருடைய தொடுதலை உணர முடியும். துயரங்கள் நமது வாழ்க்கையில் அநேக மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றை கவனமாகவும், நிதானமாகவும் கையாண்டால் மாபெரும் மாற்றங்களையும், ஆசீர்வாதங்களையும் நாம் பெற்று அனுபவிக்க முடியும்.

சங்கீதக்காரனாகிய தாவீதைக் குறித்துப் பார்க்கும்போது, தன்னுடைய வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்பட்ட வேளைகளிலெல்லாம் தேவாலயத்தில் சென்று ஆண்டவருடைய சமூகத்தில் போய் மன்றாடினார். குற்றங்களைச் செய்த வேளையிலும், சாபங்களினால் நெருக்கப்பட்ட நேரங்களிலும் விடுதலை பெற வேறு மார்க்கம் கண்டறிய முற்படாமல் தேவாலயத்திற்கு சென்று ஆண்டவருடைய சமூகத்தில் அசைவின்றி நின்றார். எனவே, ஆண்டவர் அவரை எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி விடுவித்தார், ஆசீர்வதித்தார், ஆறுதலளித்தார், துக்கங்களை சந்தோஷமாக மாற்றினார். ஆகவே, துன்பப்பாதையில் கடந்து செல்லும் தேவப்பிள்ளையே, உங்கள் துன்பத்திலிருந்து விடுதலை பெற ஆண்டவருக்கு வெளியே உள்ள எந்த வழியையும் தேட வேண்டாம். பின்பற்றவும் வேண்டாம். பின்பற்றினால் அதன் பின்விளைவு பெரும் ஆபத்தையும், கஷ்டங்களையும், தோல்விகளையும் கொண்டுவரும். உங்களிடம் ஆவியானவராகிய ஆண்டவர் பேசுகிறார். உங்கள் குடும்பம், பொருளாதாரம், பட்டம், பதவி, முக்கியமாக நீங்கள் செய்யும் ஊழியத்தைவிட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் பட்சமும், பாசமும் வைத்தால் உங்கள் விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார். கவனியுங்கள். இதற்கு சரியான இடம் உங்கள் தேவாலயம். உங்கள் சபையையும், தேவன் அருளிய உங்கள் சபையின் மேய்ப்பரையும் கனம் பண்ணுங்கள். உங்கள் தேவாலயத்தில்

உங்களுக்காக பரிபூரண ஆசீர்வாதமும், பரிபூரண சந்தோஷமும் வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நீங்களும் விட்டுவிடாமல் புத்திமான்களாய் வாழுங்கள் (எபிரெயர் 10:25). **விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்** (எபிரெயர் 11:33,34).

## 1. ஆத்துமா கரைந்து போகிறது

"**சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்து போகிறது; உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்**" (சங்கீதம் 119:28).

கவலைப்படுவதினால் ஒருவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. ஆனாலும், அனுபவ ரீதியில் துன்பங்கள் நேரும் சமயங்களில் நாம் கவலைப்படாமல் இருக்கவும் முடிவதில்லை. தாவீதுக்கு நேர்ந்த துன்பங்கள் ஏராளம். தன் மாமனாகிய சவுலாலும், தன் மகனாகிய அப்சலோமினாலும் மற்றும் பிறதேசத்து மக்களாலும் துன்பங்கள் நெருக்கிக் கொண்டேயிருந்தன. இதனால் தனது ஆத்துமா கரைந்து போயிற்றென்று அவர் கூறுவதைப் பார்க்கிறோம். ஆனாலும், தன்னை அழைத்த ஆண்டவரையும் அவருடைய வசனத்தையும் சார்ந்து நின்றபோது, அவரது துன்பங்கள் துக்கங்கள் யாவற்றையும் நீக்கி அவற்றை சந்தோஷமாக மாற்றினார் ஆண்டவர்!

இன்று நம்மிலும் சிலர் இது போன்ற துன்பங்கள், துக்கங்கள் மத்தியில் கடந்து போகும் நிலை ஏற்படுகிறது. சிலர் மனமுடைந்து, தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர். இவ்வாறான துன்பங்கள் ஏற்படும் நேரங்களில் மனிதர்களிடத்தில் ஆலோசனை பெற விரும்பினால், அவர்கள் வஞ்சித்து விடுவார்கள். சிலர் தவறான ஆலோசனைகளையும் கூறுவார்கள். கவலைகள், கண்ணீர்கள் மத்தியில் ஆண்டவரை நோக்கிப் பார்த்து அவரை, எவ்வித நிபந்தனையுமின்றி முழுமையாக சார்ந்திருப்போமானால், நமது துன்பங்களினின்று தப்பித்துக்கொள்ளும் வழியை காட்டுவதோடு, கட்டாயமாக ஆச்சரியமான வழியில் விடுதலையையும், ஆறுதலையும் தருவார். "**கொடூரமானவர்களின் சீறல், மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்**"

(ஏசாயா 25:4).

துன்பம் அதிகரிக்கும்போது, நேரம் எடுத்து வேதத்திலுள்ள வசனங்களை சத்தமாக வாய்விட்டு வாசிக்க வேண்டும். நம்முடைய பாடுகளுக்கு ஒத்தப் பாடுகளை அனுபவித்த தேவ மக்களுடைய வாழ்க்கையில் எப்படி ஆண்டவர் தலையிட்டாரோ, அப்படியே ஆண்டவரிடமிருந்து அதிசய விடுதலையை எதிர்பார்க்கவும், விசுவாசிக்கவும் வேண்டும். நிச்சயமாகவே உங்கள் வாழ்க்கையில் உங்கள் எதிர்பார்ப்பைவிடப் பெரிய காரியங்களை ஆண்டவர் செய்வார். இச்செய்தியை அளிக்கும் என் வாழ்க்கையில் நடந்த பல்வேறு கஷ்டங்களின்போது, நான் எவ்வித நிபந்தனையும் இன்றி வேத வசனங்களை வாய்விட்டு வாசித்து, அவற்றை தியானித்து, நம்பி, அவற்றின்மேல் சார்ந்து இருக்கிறேன். தேவ சத்தம் கேட்ட சில குறிப்பிட்ட தேதிகளை என் வேதாகமத்தில் சம்பந்தப்பட்ட வசனங்களின் அருகில் எழுதி வைத்திருக்கிறேன். அசாதாரணமான வெற்றிகளைப் பெற்றிருக்கிறேன். நீங்களும் அப்படியே செய்யுங்கள். வெற்றி நிச்சயம்.

## 2. கண்கள் தொய்ந்து போகிறது

"**துக்கத்தினால் என் கண் தொய்ந்து போயிற்று; கர்த்தாவே, அநுதினமும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு நேராக என் கைகளை விரிக்கிறேன்**" (சங்கீதம் 88:9).

துக்கத்தினால் தன் கண் தொய்ந்து போகிறதாகக் கூறுகிறார். துக்கம் அதிகரிப்பதால் கண் பார்வையில் வித்தியாசத்தை உணரமுடியும். மயக்கம் உண்டாகும். சிந்தனை சக்தி குறையும், தூக்கம் கலையும், மறதி அதிகமாகும், எதிர்கால நம்பிக்கை அற்றுப் போகும். பிறருடைய சகாயங்களும் குன்றிப் போகும். இவற்றிலிருந்து விடுதலைபெற என்ன செய்யலாம்? துக்கம் மேற்கொள்ளும்போது, மேலும் சோர்வுக்கு இடமளிக்காமல், இரண்டு காரியங்களை செய்ய வேண்டும்.

முதலாவதாக, ஆண்டவரிடம் நம் சூழ்நிலைகளை மிகவும் தெளிவாகச் சொல்லி, ஜெபம் பண்ணவேண்டும். "**என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவிகொடுத்தீர்; உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்**" (சங்கீதம் 119:26). பொறுமையாக நேரம் எடுத்து, தெளிவாக ஆண்டவரிடம் பேசி உறவாடும் பழக்கம் மிகப்பெரிய அசாதாரண வெற்றியைக் கொண்டு வரும். ஆனால் இந்த நாட்களில் ஆண்டவரிடம் பேச நேரம் தராமல் உலகப்பிரகாரமான சகாயங்களையும், தங்கள் சொந்தக் காரியங்களையும், உலகப்பிரகாரமானக் கேளிக்கைகளையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், செல்போன் தகவல்களையும் நாடி, அவற்றிற்கு முன்னுரிமை அளித்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையை பலர் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இக்கால கிறிஸ்தவ தொலைக்காட்சி ஊழியர்களில் சிலர் ஆவிக்குரிய மக்களை சோம்பேறிகளாகவும், செயல்படமுடியாதவர்களாகவும் மாற்றி வருகின்றனர். அவர்கள் ஜெபிக்கிற மக்களை ஜெபிக்க விடாமலும், வேதத்தை வாசிக்கிற மக்களை வேதத்தை வாசிக்கவிடாமலும் செய்து வருகிறார்கள். இது இக்காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. ஆனால், நீங்களோ ஏதாவது ஒரு தேவ செய்தியை தொலைக்காட்சியில் பார்த்துவிட்டாலும், பின்னர் அதை மூடிவைத்துவிட்டு, ஜெபத்திலும், வேதவாசிப்பிலும், தியானத்திலும் செல்லுங்கள். உங்கள் சொந்த ஆவிக்குரிய வேலைகளைச் செய்யுங்கள். ஜெயம் கிடைக்கும். தொடர்ந்து காலை 5 மணி முதல், மணிக்கணக்காக உட்கார்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தால் தோல்வி நிச்சயம்! ஏனென்றால் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், வித்தியாசம் வித்தியாசமான தவறான உபதேசங்களும், செய்திகளும் இடம்பெறுவதால் அப்பாவி மக்கள் ஏராளம் பேர் ஏமாற்றங்களுக்குள்ளும், குழப்பங்களுக்குள்ளும் நடத்தப்படுகின்றனர். ஒவ்வொரு தொலைக்காட்சி ஊழியரும் உலக மக்களின் ஆவிக்குரிய உயிர்மீட்சியைக் கருத்திற்கொள்ளாமல் தங்கள் சொந்தக் கருத்துக்களையும் முன்நிறுத்துகின்றனர். இதுவும் தவிர்க்கமுடியாத காலத்தின் கட்டாயம். உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

இரண்டாவதாக, உங்கள் கைகளை ஆண்டவருக்கு நேராக விரிக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், உங்கள் கவனத்தையும், நம்பிக்கையையும் ஆண்டவர் மேலேயே வைக்க வேண்டும். உங்கள் எண்ணங்களும், செயல்களும் ஆண்டவருக்குப் பிரியமாயிருக்க வேண்டும். நீண்ட ஜெபத்தையும், ஆழ்ந்த உபவாசத்தையும் செய்துவிட்டு, பாவத்தில் வாழ்ந்து, பிறருக்கு உபத்திரவம் செய்து, பிறரை வஞ்சித்து வாழ்வதால் பிரயோஜனம் இல்லை. தேவனுடைய வசனத்திற்கு செவிகொடாதவர்களுடைய மற்றும் வசனத்தின்படி வாழாதவர்களுடைய ஜெபங்கள் கர்த்தருக்கு அருவருப்பானவை. "**வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது**" (நீதிமொழிகள் 28:9). "**துன்மார்க்கனுடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம். துன்மார்க்கருடைய வழி கர்த்தருக்கு அவருவருப்பானது; நீதியைப் பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார்**" (நீதிமொழிகள் 15:8,9). இன்றைய சூழ்நிலையில் உங்கள் கவனம் எங்கேயிருக்கிறது? யாரிடத்திலிருந்து உதவியை எதிர்பார்க்கிறீர்கள்? எந்த வழியில் தேடுகிறீர்கள்?

## 3. ஆவி முறிந்து போகிறது

"**மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்; மனோதுக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்**" (நீதிமொழிகள் 15:13). "**மன மகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்**" (நீதிமொழிகள் 17:22).

இரும்பினாலோ, வெண்கலத்தினாலோ அல்லது அலுமினியத்தினாலோ செய்யப்பட்ட ஒரு பொருள் உடைந்துபோனால்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

# பிரதான கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2022 ஜூன் 19 முதல் ஜூலை 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூன் 19 ⇨ கர்த்தர், நமது இணை ஆசிரியர் சகோதரர் மனுவேல் எம். பால்ராஜ் அவர்களையும் மற்றும் அவர்களின் குடும்பத்தினரையும் அனைத்துத் தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாத்து வருகிறதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 20 ⇨ கடந்த மாதத்தில் நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் நெகேமியா வேதாகமக் கல்லூரியின் தலைவர்கள் ஒரிசா மாநிலத்திற்குச் சென்று நமது இந்தி முழுநேர வேதாகமக் கல்லூரியின் மாணவர் சேர்க்கைக்காக, போதகர்களை சந்தித்துவர கர்த்தர் கிருபை செய்தார். பிரயாணங்களையும் பாதுகாத்தார். அதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 21 ⇨ நமது ஊழியங்களை ஜெபங்களினாலும், பொருளாதாரங்களினாலும் ஆதரிப்பவர்களுக்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 22 ⇨ கடந்த மாதம் முழுவதும் நமது **அழைப்பின் எதிரொலி ஆலயங்களில்** நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

ஜூன் 23 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்றடைய கர்த்தர் கிருபையாய் உதவி செய்தார்.

ஜூன் 24 ⇨ நமது **ஹிந்தி இணையவழி இறையியல் வேதாகமக்கல்விமுறையை** பெரிதான அளவில் ஆசீர்வதித்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 25 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச் சபைகளையும், விசுவாசிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஜூன் 26 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 27 ⇨ நமது ஊழியப் பணித்தளங்களில் இருந்து நல்ல அறிக்கைகளைப் பெற்று வருகிறோம்.

ஜூன் 28 ⇨ இதுநாள்வரையிலும் இந்நிறுவன செயல்பாட்டினை முழுமையாக ஆதரிக்கவும், வழிநடத்தப்படவும் நாங்கள் மேற்கொண்ட காரியங்களை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூன் 29 ⇨ நம் தலைமைச்சபையின் ஞாயிறு ஆராதனைகளையும் மற்றும் ஏனைய ஆராதனைகளையும் கிருபையோடு ஆசீர்வதித்து வரும் கர்த்தரை நன்றியோடு துதிப்போம்.

ஜூன் 30 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் பெண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஜூலை 01 ⇨ 1969–ம் ஆண்டு முதல், நமது பத்திரிகை ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜூலை 02 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

ஜூலை 03 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்துள்ளார்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூலை 04 ⇨ நமது இணை ஆசிரியர் சகோதரர் மனுவேல் எம். பால்ராஜ் அவர்களுக்கு கர்த்தர் பரிபூரண சுகத்தை கொடுக்க ஜெபிப்போம்.

ஜூலை 05 ⇨ கர்த்தர் நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்கு** அர்ப்பணிப்புள்ள பணியாளர்களை கொடுக்க ஜெபிப்போம்.

ஜூலை 06 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் புதிய பெலனுக்காகவும் ஜெபிப்போம்.

ஜூலை 07 ⇨ உலகத்திலுள்ள அனைத்து ஆவிக்குரிய தலைவர்களுக்காக ஜெபிப்போம்.

ஜூலை 08 ⇨ உலகில் உள்ள அனைத்து மக்களையும் ஆசீர்வதிக்க கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

ஜூலை 09 ⇨ நமது தலைமைப் போதகர் எழுதிவரும் சுயசரிதைக்கான வழிநடத்துதல்களையும் மற்றும் வழிவாசல்களையும் அபரிமிதமான அளவில் ஆசீர்வதிக்க வேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஜூலை 10 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதான கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.

ஜூலை 11 ⇨ இந்த மாதத்தின் **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க ஜெபிப்போம்.

ஜூலை 12 ⇨ ஊழியப் பணித்தளங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

ஜூலை 13 ⇨ கர்த்தரின் கருணைமிகு சமாதானம் நமது ஊழியக் கூடுகைகளிலும் மற்றும் சகலவித நிர்வாக செயல்பாடுகளிலும் நிறைந்திருக்க வேண்டி ஜெபிப்போம்.

ஜூலை 14 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க ஜெபிப்போம்.

ஜூலை 15 ⇨ கொரோனா என்ற வைரஸ் உலகத்தை விட்டு நிர்மூலமாக ஜெபிப்போம்.

ஜூலை 16 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க ஜெபிப்போம்.

ஜூலை 17 ⇨ உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காகவும் ஜெபிப்போம்.

ஜூலை 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பம் மற்றும் குழுக்களை கர்த்தர் அனைத்துத் தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ஜெபிப்போம்.

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

அதனை இணைக்கலாம். சீராக்கி விடலாம். ஆனால் நம் உள்ளத்தில் மறைந்திருக்கும் ஆவி முறிந்துபோனால் அல்லது உடைந்துபோனால் அதனை சரிப்படுத்த உலகில் எந்த பொருளாலும், நிபுணராலும், மருத்துவராலும் இயலவே இயலாது. உலகத்தில் ஏற்படும் தோல்விகள், பொருளாதாரச் சீர்குலைவுகள், வியாதிகள், குடும்பப் பிரச்சினைகள் முதலானவைகள்தான் நம் ஆவி முறிந்து போவதற்குக் காரணங்களாகும். இதில் வெற்றிபெற ஒரே ஒரு வழிதான் உண்டு. அது மெய்யான மனமகிழ்ச்சி அல்லது சந்தோஷம் மட்டுமே.

இந்த மெய் சந்தோஷம் எங்கேக் கிடைக்கும்? கடையில் கிடைக்குமா? போதைப் பொருட்களிலும், தகாத உறவுகளிலும் கிடைக்குமா? இல்லை! இதற்கு தாவீது சொல்லும் ஒரே பதில், “**கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்**” (சங்கீதம் 122:1).

உண்மையாய் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கிற தேவாலயத்தில் சென்று, தேவனை ஆராதிக்கிற தேவமக்களுடன் தேவனைப் போற்றிப்பாடி, கைகளைத் தட்டி, கைகளை உயர்த்தி, கூடுமானால் முழங்காலில் நின்று, உற்சாகமாய் ஆவியில் நிறைந்து தேவனை ஆராதிக்கும்போது உண்மையான சந்தோஷமும், மன மகிழ்ச்சியும் உண்டாகும். வியாதிகள் மறையும்; பில்லிசூனியக் கட்டுகள் செயலிழந்து போகும்; சாத்தான் உங்களை விட்டு ஓடிப்போவான்; பயங்கள் நீங்கிப் போகும்; நிலைவரமான விடுதலை கிடைக்கும்.

இந்த அனுபவத்தை நமது சபையில் நாம் அனுபவிக்கிறோம். எவ்வளவு பெரிய இன்பம்! எவ்வளவு பெரிய சந்தோஷம்!! எவ்வளவு பெரிய சமாதானம் – எவ்வளவு பெரிய மனமகிழ்ச்சி!!! போதகர்களே, நீங்கள் உங்கள் சபைகளில் இப்படியாக ஆவியில் முறிந்து உங்களை நாடிவரும் மக்களைக் கட்டவிழ்த்துவிடும் முயற்சியில் ஈடுபட்டு, அதன் அடிப்படையில் சபைகளை நடத்துங்கள். இதனை வாசிக்கிற அன்புப்பிள்ளைகளே, உங்கள் ஆலயத்தை முக்கியப்படுத்துங்கள். அப்படியானால், உங்கள் ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். “**உங்கள் ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்**” (சங்கீதம் 36:8). “**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்**” (பிலிப்பியர் 4:4). நம்பிக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கையையும் மனமகிழ்ச்சியையும், முகமலர்ச்சியையும் அளிப்பது உங்கள் கர்த்தருடைய ஆலயம் மட்டுமே! மட்டுமே!! ஆகவே ஞாயிறுதோறும் மற்றும் இதர நாட்களிலும் தேவாலயத்துக்குச் சென்று தேவனை ஆராதியுங்கள். “**கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்**” (சங்கீதம் 92:13). “**என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று**” (ஏசாயா 58:13,14).

## 4. இருதயத்தை ஒடுக்குகிறது

“**மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்; நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்**” (நீதிமொழிகள் 12:25).

ஒடுக்குதல் என்று சொல்வது, இருதயம் சுருங்குதல் அல்ல. இருதயத்தின் செயல்பாடுகள் ஒடுக்கப்படுவது ஆகும். இப்படி ஒடுக்கப்படும்போது மனிதர்கள் தங்கள் சிந்தனாசக்தியை இழந்து விடுகின்றனர். சில நேரங்களில் ஏற்படும் துன்பங்களால் மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள், விபரீதமான முடிவுகளைத் தீர்மானிக்க வைக்கிறது. சிலர் வீட்டைவிட்டு வெளியேறி, மனதிற்கு நிம்மதி கிடைக்கும் இடத்தைத் தேடி அலைகின்றனர். சிலர் தங்களால் இயன்ற அனைத்து வழிகளிலும் முயற்சித்துவிட்டு அதிலும் பயனின்று மனம் தளர்ந்தவர்களாய், தங்கள் உயிரைப் போக்கிக் கொள்ளத் தீர்மானிக்கின்றனர். ஒரு இரகசியம் என்னவென்றால் உண்மையான இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக வாழும் எந்த நபரும் தற்கொலை முயற்சி செய்யமாட்டார்கள். இது உண்மை! ஆச்சரியம்!! இங்குதான் கிறிஸ்தவ மார்க்கம் மற்ற மார்க்கங்களைவிட உயர்ந்து நிற்கிறது!

இதுபோன்ற ஏராளமான துன்பங்கள் வந்தபோதும், தாவீது மனம் தளராமல் ஆண்டவர் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவராயிருந்தார். “**தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; ... தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்**” (1 சாமுவேல் 30:6).

## 5. தாவீதின் அனுதின அனுபவங்கள்

“**தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான், நாள் தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்**” (சங்கீதம் 56:1). **உபத்திரவங்களும், துன்பங்களும் 3 விதங்களில் வருகின்றன.**

1. நம்முடைய சிந்தனையினால் உண்டாகின்றன.
2. நாம் எடுத்த சில தவறான முடிவுகளினால் உண்டாகின்றன.
3. பிசாசினாலும், அவனால் இயக்கப்படுகிற மனிதர்களின் பொறாமையினாலும், எரிச்சலினாலும் உண்டாகின்றன.


# நெகேமியா வேதாகம முழு/மாலைநேரக் கல்லூரி, சென்னை.

**வேளச்சேரி / சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : இந்தி/தமிழ்

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969

*Registered Candidate for Membership*

Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Theology : ஒரு வருடம்**

**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## மனிதரைப் பற்றிய பயம்

நம் உள்ளத்திலே நமக்கு விரோதமான நம்முடைய சந்தேகங்களின் அடிப்படையிலே, குழப்பங்களின் அடிப்படையிலே, கவலைகளில் அடிப்படையிலே ஏற்படுகிற நம்முடைய மனநிலைதான் பெரிதும், பயங்கரமுமானது. இந்தச் சூழ்நிலையில் தாவீது, "மனுஷன் என்னை விழுங்கப் பார்க்கிறான்" என்று பயத்தில் மூழ்கி விட்டார். எப்பேர்ப்பட்ட பெலசாலியான மனிதனையும் பயமும், சந்தேகமும் செயலிழக்கச் செய்துவிடும். இதற்கு மாற்றுக்கருத்தே கிடையாது.

தாவீதை சுற்றிலும் விரோதம் கொண்ட நாடுகள் இருந்ததால், அவர்களால் ஆபத்து வரக்கூடும் என்றும், யுத்தங்கள் எழக்கூடும் என்றும் பயந்திருந்தார். குடும்பத்தினரே அவரை அசைக்க முற்பட்டதால் பலநேரங்களில் பயத்தின் ஆவியினால் கட்டப்பட்டார். "**திகிலும் நடுக்கமும் என்னைப் பிடித்தது, என் எலும்புகளெல்லாம் நடுங்கினது. அப்பொழுது ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாக கடந்தது, என் உடலின் மயிர் சிலிர்த்தது**" (யோபு 4:14,15).

வேதம் கடுமையாக கண்டிக்கும் பயம் உண்டு. அது எவ்வளவு கொடுமையான தென்றால், அக்கினி கடலிலே பங்கடைபவர்களது பட்டியலில், முதலாவது பயப்படுகிறவர்கள் என்று வேதம் கூறுகிறது. நாம் சீர்செய்யா விட்டால், நம்முடைய நித்தியத்தையே அது சீர்குலைத்துவிடும். "**பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்**" (வெளிப்படுத்தின விசேஷம் 21:8). நம்முடைய வாழ்வில் இந்த பயத்தை அகற்றி வெளியேற்றுவோம்.

முதலாவதாக நாம் பயத்தை சரியாய் அறிந்துகொள்ள வேண்டும். அது ஒரு அந்தகார ஆவி. "**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்**" (2 தீமோத்தேயு 1:7). அதனுடைய பிறப்பிடம் நரகம். பயத்தின் பிரசன்னமே ஒரு மனிதனை தேவனிடமிருந்து விலக்கிவிடும். சில ஜனங்கள் பயத்தை ஒரு குணாதிசயமாகவும், பாரம்பரியமாய் தொடரும் ஒரு காரியமாகவும் அல்லது பொதுவான பழக்கவழக்கமாகவும் கருதுகின்றனர். பயத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்வதைக் காட்டிலும் ஆவிக்குரியப் பிரகாரமான பெரிய மதியீனம் வேறொன்றுமில்லை. அது ஒரு அணுகுண்டிற்குள், அணுவை நுழைத்து, உங்கள் வாழ்வை சர்வநாசம் செய்துவிடும் காரியமாக இருக்கிறது. அது பிசாசிடமிருந்து வருகிறது. ஆகையால் அதை எதிர்த்து நில்லுங்கள். உங்கள் வாழ்விலிருந்து இன்றே அந்த அசுத்த ஆவியை அப்புறப்படுத்த ஆயத்தமாகுங்கள்!

தேவனுடைய வசனம் பயத்தின் ஆவியை குறித்து சொல்லுவதை அறிந்தபின், இப்பொழுதே அதற்கு விரோதமாக நாம் உறுதியாக நின்று அதனை துரத்துவோம். பிசாசிற்கு விரோதமாக விசுவாசியின் கைகளில் இருக்கும் மரணாயுதம் இயேசுகிறிஸ்துவின் இரத்தமாக இருக்கிறது. நம் வாழ்க்கையின் சாதாரணமான அற்பமான ஒருபகுதி கூட இயேசுவின் இரத்தத்தால் மூடப்படாமல் இருக்கக் கூடாது. அப்படி மூடப்பட்டால் பிசாசு நடுநடுங்குவான்.

"**நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது**" (யோபு 3:25).

பிசாசு மிகவும் பெலவீனமாக உணரும் நேரம் எதுவென்றால் அவன் பெலவீனங்கள் வெளிப்படுத்தப்படும் நேரம் மட்டுமே. அவனை விரட்டியடிக்க இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இரத்தமும், அவர்மேல் உள்ள நம் விசுவாசமுமே சரியான ஆயுதங்கள். நரகத்திலே அவன் சென்றடையும் நேரத்தில் தானே அவனது முழுத்தன்மை வெளிப்படும். அவன் முகமூடி அணிந்து திரியும் ஒரு மகா வஞ்சகன். "**சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு ... அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே**" (2 கொரிந்தியர் 2:11). பிசாசுடன் மோதும்பொழுது அவனைக் குறித்த நம்முடைய அறிவு மிக முக்கியம்.

## காவற்காரன்

ஒரு காவற்காரனுடைய வேலை என்னவெனில், தன்னுடைய எஜமானனுக்கு முன் சென்று அவர் உள்ளே வரும்படி கதவை திறந்துவிடுவதுதான். பயம் என்பது சாத்தானுடைய காவற்காரன். பிசாசு தன்னுடைய காரியங்களை எல்லாம் நிறைவேற்றி முடிக்க பயமே அவனுக்கு மிகவும் உறுதுணை. சாத்தானுடைய சகாக்களில் 'பயம்' தான் அவனுக்கு நெருக்கமானது. பயத்தின் உதவி கிடைக்கவில்லையென்றால், சாத்தான் முக்கால் பங்கு பிணமாகிவிடுவான். பிசாசு, தான் செயல்படும்முன் தன்னுடைய எல்லாத் திட்டங்களையும் முதலில் பயத்தின் ஆவியிடம் ஆலோசனைக்கு வழங்குகிறான். பயம் ஒரு பொல்லாத ஆவி. தேவனின் பரம எதிரியாக பிசாசுக்கு முன்சென்று, நிலத்தை பண்படுத்துகிறது. பயம் சாத்தானின் செயல்பாட்டிற்கான அவனுடைய விதைகளை விதைக்க சூழ்நிலையையும், பிரசன்னத்தையும், பிரதேசத்தையும் ஏற்படுத்துகிறது. யோபுவின் சாட்சியில் நாம் அதைக் காண்கிறோம். விசுவாசமானது காணப்படாத தேவ ஆசீர்வாதங்களை, காணக்கூடிய உலகிற்கு கொண்டு வருகிறதைப் போல, பயமானது காணப்படாத பிசாசின் பயங்கரங்களை, காணக்கூடிய உலகிற்குள் கொண்டுவருகிறது.

பிசாசு செயல்படும் ஒரு வழி : பயத்தின் சிந்தனைகளை விதைக்கிறான். பயத்தின் சிந்தனைகளை எப்பொழுதும் எதிர்த்து, புறக்கணித்து வெளியேற்றுங்கள். ஒருபோதும் அதனை ஏற்றுக்கொள்ளாதீர்கள். பயத்தின் ஆவியை கீழே தள்ளி உங்கள் பரிசுத்த வாழ்க்கையின் மூலம் இயேசுவின் நாமத்தினால் துரத்த தீர்மானியுங்கள். பயத்தை அறிக்கையிடுதல் அதை முன்னேற்றுவதற்கு சமம்.

## புரட்டு வார்த்தைகள்

"**நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்; எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது**" (சங்கீதம் 56:5).

அநேகருடைய வாழ்க்கையில் கஷ்டங்கள் வித்தியாசமான சூழ்நிலைகளில் உண்டாகிறது. வேலை ஸ்தலங்களிலும், தொழில் ஸ்தலங்களிலும் நாம் நினைக்காததையும், சொல்லாததையும் சொன்னதாகக் கூறி குற்றவாளிகளாக நிறுத்தப்படும் அனுபவங்களும் உண்டு. தாவீது சொல்லும் போது, "நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்; எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது" என்று கூறுகிறார். தான் சொல்லாததை சொன்னது போலக் கொண்டுவந்து அதன்மூலம் தன்னை உபத்திரவப்படுத்துவதாகவும் கூறுகிறார். ஏதோ ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் அல்ல, நித்தமும் இது போன்று நடப்பதாகக் கூறுகிறார்.

இப்படிப்பட்ட துக்கங்கள், சூழ்நிலைகள் இன்று நமது வாழ்க்கையில் ஏற்பட்டாலும், அவையனைத்தையும் சந்தோஷமாக மாற்றித்தர ஆண்டவர் நம்மோடிருக்கிறார் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. சங்கீதம் 34:19–ல் "**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்**" என்று வாசிக்கிறோம். துன்ப காலங்கள் வரும்போது அதுதான் முடிவோ என்று யோசிக்கவோ, சிந்திக்கவோ வேண்டாம். நீதிமானுக்கு துன்பங்கள் அநேகம் வரும் என்பதும், ஆனாலும் அவற்றினின்று விடுவிக்கப்பட்டு அவனை சந்தோஷமாக வாழ வைப்பார் என்பதும் இதன்மூலம் நமக்குத் தெளிவாக விளங்கும். ஆனால், நீங்கள் நீதிமான்தானா? உங்கள் பாவங்கள் இயேசு கிறிஸ்துவால் மன்னிக்கப்பட்டுவிட்டனவா? பாவம் செய்யாமல் பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறீர்களா? என்பது மிக முக்கியம்.

"**தேவரீர் எங்களைச் சிறுமைப் படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்**" (சங்கீதம் 90:15) என்று வாசிக்கும் வண்ணமாக, நமது வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்கள், துக்கங்கள் அனைத்தையும் மாற்ற வல்ல ஆண்டவர் அதற்கு சரியான மகிழ்ச்சியையும், தீர்க்காயுளையும் தந்து உங்களை வாழ வைப்பார். நீங்கள் நீதியின்படி எவ்வளவு காலம் துன்பத்தைச் சகிக்கிறீர்களோ அவ்வளவு காலம் உங்களுக்கு ஆயுள் காலம் அதிகமாக கிடைக்கும். பயப்பட வேண்டாம்.

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)


(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## என் இளமையின் இதயத்துடிப்பும் இரத்த ஓட்டமும் சிருஷ்டிகராகிய இயேசுவுக்கே!!

1967–ம் ஆண்டு நான் கல்வி பயின்ற ஊராகிய நெய்யூரில் இருந்த மெமோரியல் ஹாலில் காலம் சென்ற கனம் பொருந்திய மிஷனரி சுவிசேஷகியாக இருந்த வயது முதிர்ந்த **சகோதரி எமியம்மாள் சன்னியாசினி அம்மாள்** அவர்கள் ஒரு மூன்று நாள் சுவிசேஷக் கூட்டம் நடத்தினார்கள். அதில் நாசரேத் ஜெப ஐக்கியம் (Nazareth Prayer Fellowship) என்ற ஜெபக்குழுவிலிருந்து சகோதரர்கள் மைக்கேல் செல்லத்துரை, ஜான் விக்ளிப், யோசுவா ஞானதுரை, ஜான் கோயில்பிச்சை (ஜெபவீடு பொறுப்பாளர்) போன்றவர்கள் தங்கள் உடன்ஊழியர்களுடன் வந்து தங்கள் சாட்சிகளுடன் இரட்சகர் இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள். அவர்களுக்கு பணிவிடை செய்யும்படியாக **சகோதரி எமியம்மாள் சன்னியாசினி அம்மாள்** அவர்கள் என்னைப் பயன்படுத்தினார்கள். நான் அந்த ஊழியர்களுக்குக் குளிப்பதற்கு வேண்டிய தண்ணீரை மொண்டு கொடுத்து, அவர்களுடைய துணிகளைத் துவைத்துக் கொடுத்து, அவர்கள் பாதரட்சைகளை சுத்தம் பண்ணி, சாப்பாடு ஏற்பாடு பண்ணி அவர்களுக்குப் பாதுகாவலனாக இருந்தேன். அப்போது அவர்கள் நெய்யூரில் உள்ள டாக்டர் **D. அய்யாத்துரை** அவர்களுடைய **ஆங்கிலோ இண்டிஜீனியஸ் க்ளினிக் (Anglo Indigenous Clinic)** மாடியில் தங்கியிருந்தார்கள். டாக்டர் D. அய்யாத்துரை அவர்கள் அதிக ஊழிய வாஞ்சையுள்ளவர்களும், அதிக காணிக்கைகளை வாரியிறைத்து தேவ ஊழியர்களைத் தாங்கியவர்களுமான ஓர் பரிசுத்தவான். **சிசு வைத்திய ஆசிரமம்** என்னும் மருத்துவமனையை நடத்தி வந்த அவர்களுடைய இளைய சகோதரன் **டாக்டர் D. சைமன்** அவர்கள் என்மேல் அன்பு பாராட்டி எனக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி ஆதரித்தார்கள். ஒருமுறை அவர்கள் என்னைப் பார்த்து "உன்மேல் ஒரு தனித்தன்மை இருக்கிறது" என்று பாராட்டினார்கள். அப்போது எனக்கு வயது 18.



சகோதரி எமியம்மாள் சன்னியாசினி அம்மாள்



சகோதரர் ஜான் விக்ளிப்



டாக்டர் D. அய்யாத்துரை



டாக்டர் D. சைமன்



சகோ. யோசுவா ஞானதுரை, சகோ. மைக்கேல் செல்லத்துரை, சகோ. ஜான் அற்புதராஜ்

அக்கூட்டங்களில் இயேசு கிறிஸ்துவின் மூலம், உலகப் பாவங்கள், சினிமா போன்றவற்றிலிருந்து எப்படி அந்த ஊழியர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்றும், வாலிபப் பருவத்தில், உலகப் பாவங்களிலிருந்தும், தீமை பயக்கும் உல்லாசங்களிலிருந்தும் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள் என்றும், பரிசுத்தமாய் வாழ்வதின் மூலம் உள்ள சந்தோஷங்களையும் சாட்சிகளாய் எடுத்துரைத்தார்கள்.

அக்கூட்டங்களின் முடிவு நாளில் என் உள்ளத்தில் ஏற்பட்ட பாவ உணர்வின் மூலம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அத்துடன் பரிசுத்த வாழ்க்கையின் மீதுள்ள ஆழமான ஆசையும், என் ஒரே வாழ்க்கையை மிகவும் பயனுள்ளதாக மாற்றி ஜீவனுள்ள ஆண்டவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நிபந்தனையற்ற தீர்மானமும் என்னை தேவ ஊழியத்திற்கு நேராக உந்தித் தள்ளியது. அன்று என் பாவங்களுக்காக மிகவும் மனஸ்தாபப்பட்டு, அவற்றை அறிக்கையிட்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்காக வாழ என்னை பரிபூரணமாக அர்ப்பணித்தேன். இரட்சிப்பு என்னும் அந்தஸ்தை நான் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொண்டேன். **உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்** (ரோமர் 12:2).

ஊழியநாட்களின் முடிவில் என்மேல் பாசமும், பரிவும் கொண்ட **நாசரேத் ஜெப ஐக்கிய (Nazareth Prayer Fellowship)** தேவ ஊழியர்கள் என்னைத் தங்கள் ஊருக்கு வரும்படி அழைத்தார்கள். எனவே, என் பெற்றோர்கள் அனுமதியுடன் நானும் அவர்களுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாசரேத் ஊருக்குச் சென்றேன். மிஷனரி சகோதரி எமியம்மாள் சன்னியாசினி அம்மாவும் எங்களுடன் வந்தார்கள்.


### உன்னத அனுபவம்! நாசரேத் ஜெப ஐக்கியம்!

ஓர் ஓலைக் கொட்டகை! அங்கு உயர்கல்வி கற்றவர்களும், பிரபல மார்காஷிஸ் பள்ளி மற்றும் கல்லூரியில் பயின்ற மாணவர்களும், ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் மற்றும் பல துடிப்புள்ள சகோதரர்களின் அனுதின மாலைநேரக் கூடுகை இருந்தது. காலையில் எளிய சிற்றுண்டி!!! மதியம் ஓர் ருசிமிக்க சாம்பாரும், மிக ருசியான ரசமும், சாப்பாடும் அத்துடன் இரவிலும் ருசி மிக்க ரசமும், சாப்பாடும் பரிமாறப்பட்டன. இது ஒரு ஆச்சரியமும் அதிசயமுமான அனுபவமாக இருந்தது. அந்த ஓலைக் கொட்டகையில் பகலிலும், இரவிலும்

தேவபிரசன்னம் இருந்தது. அங்குள்ள தேவ ஊழியர்களின் பழக்கவழக்கங்களும் செயல்பாடுகளும் என்னைக் கவர்ந்து இழுத்தன. நானும் அவர்களைப் போன்ற தேவ பிள்ளையாக மாறவேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் எனக்குள் பெருகிவந்தது.

## தேரி அனுபவம்! (Deserted Place)

தினமும் மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை அங்குள்ள தேரி என்று சொல்லப்பட்ட வனாந்தரப் பகுதியில் எல்லாரும் கூடி பாடல்பாடி, வேதம் வாசித்து, தனி ஜெபமும், கூட்டு ஜெபமும் நடைபெற்றதில் என்னையும் சேர்த்து ஜெப வாழ்க்கையின் இரகசியத்தையும், பரிசுத்தாவியானவரால் நிறைந்த வாழ்க்கைமுறையையும் கற்றுக்கொடுத்தனர்.



**சகோ. ஜான் கோயில்பிச்சை**



**சகோ. *R.* ஸ்டான்லி**
*(Blessing Youth Mission)*

அவர்களில் சகோதரர்கள் சாந்தகுமார், ஜேக்கப் செல்வராஜ், ஜான் அற்புதராஜ், பாக்கியராஜ், பிலிப் ஜெயசிங், குணசேகர், குமாரதாஸ் (தென்காசி), குமாரதாஸ் (பெங்களூர்), இம்மானுவேல், குமார், ஸ்டான்லி, டேனியல், கிதியோன், சாமுவேல், திமோதி, மாணிக்கம், காலேப் பால் பாண்டியன், பிலிப் ஜெயசிங், ஜோசப் குணசிங், டைட்டஸ் மரிய சுந்தரம், பென்னி, ஆர். ஜே. அற்புதராஜ், ஜோதி பாண்டியன் ஆகியோர் என் நினைவில் நிற்கின்றனர். எனக்கு கிடைத்த சில சகோதரர்களின் பழையப் புகைப்படங்களையும் இங்கு வெளியிடுகிறேன்.

15 நாட்களுக்குப்பின் சகோதரி எமியம்மாள் சன்னியாசினி என்னை அங்கிருந்து என் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்ல வந்தபோது, எனக்காக அந்த ஊழியக்காரர்கள் ஓர் விசேஷ ஜெபத்தை கண்ணீரோடு ஏறெடுத்தனர்.

அப்போது சகோதரர் மைக்கேல் செல்லத்துரை அவர்களும், சகோதரர் ஜான் விக்ளிப் அவர்களும், சகோதரர் யோசுவா ஞானதுரை அவர்களும், சகோதரர் கோயில் பிச்சை அவர்களும், இதர மூத்த ஊழியர்களும் என் தலைமீது தங்கள் கைகளை வைத்து எனக்காக ஜெபம் பண்ணினார்கள். அப்போது அவர்களில் ஒருவர் மூலம் கீழ்க்கண்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் உரைக்கப்பட்டன: அதாவது,

“மகன் சாம் செல்வ ராஜ், உன்னை நானே எனக்கென்றுத் தெரிந்தெடுத்தேன். உன்னைக்கொண்டு நான் பலத்த காரியங்களை செய்யப்போகிறேன். உன் பெயருக்கேற்றபடி வேதத்திலுள்ள



**நாசரேத் ஜெப ஐக்கிய தேவ ஊழியர்கள்– 1967**

சாமுவேலைப்போல் உன்னை ஓர் தீர்க்கதரிசியாகவும், அதிகாரம் மிக்கவனாகவும் உயர்த்துவேன். ஏராளமான மக்களுக்கு ஆகாரம் கொடுக்கிற தகப்பனாகவும், பரலோகத்தரம் வாய்ந்த, வெட்கப்படாத, தைரியம் நிறைந்த ஊழியனாகவும் உன்னை மாற்றுவேன். நான் உன்னோடே கூட இருந்து, நீ கேட்கிற எல்லாவற்றையும் உனக்குத் தருவேன். உலகத்தின் ஏராளமான தேசங்களுக்கு நான் உன்னை அனுப்பி, என் ராஜ்யத்தை உன் மூலம் உலகமெங்கும் விஸ்தாரம் பண்ணுவேன். உனக்கு நற்சுகமும், தீர்க்காயுசும் தருவேன்.” “**நீ என் பார்வைக்கு அருமையானபடியால் கனம் பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்**” (ஏசாயா 43:4) என்பதே.



இந்நிலையில் உலகப்பிரசித்திப் பெற்ற “**வருகையின் தூதன்**” **(Herald of His Coming)** என்ற பத்திரிகையின் இந்தியத் தலைமை ஆசிரியராக (India Editor-in-Chief) இருந்த தேவ ஊழியர் மறைதிரு. S. தேவதாசன் அவர்களின் அழைப்பின் அடிப்படையில் என்னை அவர்களுக்குப் பணிவிடை செய்யும்படியான கடைநிலை ஊழியனாக 1969–ம் ஆண்டு தேவன் அனுப்பினார். தேவன் நல்லவர்.

– தொடரும்.

---

... 7–ம் பக்கத் தொடர்ச்சி

நான் கலங்கிடும் நாளில், நான் கலங்கிடும் நாளில்
இயேசுவைநம்புவேன் இயேசுவை நம்புவேன்.
நான் பயப்படும் நாளில், நான் பயப்படும் நாளில்
இயேசுவை நேசிப்பேன் இயேசுவை நேசிப்பேன்.

உங்கள் வாயிலிருந்து வரும் விசுவாச அறிக்கைகளும், வார்த்தைகளும் ஒடுக்கப்பட்ட உங்கள் இருதயத்துக்கு மகிழ்ச்சியையும், விசாலத்தையும் கொண்டுவரும்.

சாதாரணமாக பெருங்கஷ்டங்கள் இருதயத்தைத் தாக்கும்போது, வாயிலிருந்து நல்ல வார்த்தைகள் வருவதில்லை. எப்பேர்பட்ட உயர்ந்த அனுபவம் மிக்கவர்களாக இருந்தாலும் கீழ்க்கண்ட வார்த்தைகளை பேசாமல் இருப்பதில்லை:

1. என் ஜெபம் கேட்கப்படவில்லை (யோபு 30:20).
2. ஆண்டவர் என்னைப் பாராதவர் போல் இருக்கிறார் (யோபு 30:20).
3. ஆண்டவர் எனக்கு பொல்லாதவராக மாறிவிட்டார் (யோபு 30:21).
4. ஆண்டவர் என்னை விரோதியைப் போல் நடத்துகிறார் (யோபு 30:21).
5. ஆண்டவர் என்னை மேலேத் தூக்கிக் கீழே போட்டுவிட்டார் (யோபு 30:22).
6. நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமை வந்தது (யோபு 30:26).
7. வெளிச்சத்துக்குப் பதிலாக எனக்கு இருள் வந்தது (யோபு 30:26).
8. யாருக்கும் இல்லாத கஷ்டம் எனக்கு வந்தது.
9. என் வாழ்க்கை கஷ்டத்தினால் முடிந்துவிட்டது (சங்கீதம் 31:10).
10. என் காலம் தரித்திரத்தால் கழிந்துவிட்டது (சங்கீதம் 31:10).

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் இன்று இருக்கிறீர்களா? சோர்ந்து போகாதிருங்கள். உங்களுக்கும் ஆண்டவர் அற்புதம் செய்வார். நீங்கள் செய்யவேண்டியது என்ன?

1. அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசாதிருங்கள். விசுவாசமுள்ள நம்பிக்கையூட்டும் நல்ல வார்த்தைகளை மட்டும் பேசுங்கள்.
2. உங்கள் விசுவாசத்தைக் குழப்புகிற மக்களிடமுள்ள உங்கள் ஐக்கியத்தைக்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

குறையுங்கள். உங்கள் விசுவாசத்தை ஊக்குவிக்கும் நல்ல கூட்டாளிகளுடன் உறுதியான உறவு கொண்டு இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழுங்கள்.

3. நம்புவதற்கு ஏதுமில்லாவிட்டாலும் ஆண்டவரையும் அவருடைய அற்புதம் செய்யும் வல்லமையையும் நம்புங்கள்; அவரையே ஜெபத்துடன் சார்ந்திருங்கள். அற்புதம் நடக்கும்.

**உங்கள் புலம்பல் ஆனந்தக்களிப்பாக மாறும்!** (சங்கீதம் 30:11)

★★★

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th MAY 2022**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**